

சென்னை எழும்பூர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை போட்டியின் இரண்டாவது நாளில் இந்தியா மற்றும் ஜப்பான் அணிகளுக்கு இடையே நடைபெற்ற பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் .எ.வ.வேலு , கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.உடன் முனைவர் அதுல்யமிஸ்ரா, ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய அணி முன்னால் கேப்டன் பாஸ்கரன் இருந்தனர்.

# திருப்பத்தூர் - காரைக்குடியில் பாகமுகவர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! மு.தென்னவன் சிறப்புரை!

சிவகங்கை, ஆக, 6-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி பாகமுகவர்கள் கூட்டம் திருப்பத்தூர் சிந்தாமணி திருமண மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.சண்முக வடிவேலு, விராமதி மாணிக்கம், குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், பூமணி, கே.பாலசுப்பிரமணியன், எஸ்.செல்வராஜ் ஆகியோர் பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள், கரு .அசோகன், பள்ளத்தூர் கே.எஸ். ரவி, பேரூராட்சி மன்ற தலைவர்கள் அம்பலமுத்து, திருமதி கோகிலராணி நாராயணன், துணை தலைவர்கள் செந்தில், கான்முகமது, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ்.நாராயணன், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம். சாக்ளா, மற்றும் நிர்வாகிகள் சிவபுரி சேகர், ராம. ரவி, குடோன்மணி, பாஸ்கரன், மனோகரன், காளிமுத்து, சோமசுந்தரம், ஷாஜகான்,ஏ.எல்.சந்திரன், வி.பி. ஜெகன்னாதன், ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன் பிள்ளையார் பட்டி வெள்ளைச்சாமி, புதூர் கண்ணன் ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், பிளாசாசேகர், சன்சீமான் சுப்பையா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடி சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள் கூட்டம் அபூர்வ மகாலில் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், காரைக்குடி நகரமன்ற தலைவருமான எஸ்.முத்துதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. காரைக்குடி நகர செயலாளர் என்.குணசேகரன் வரவேற்றுப் பேசினார். இந்த கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னதுரை, கே.ஆர்.ஆனந்த், நாகனி ரவி, பூபால சிங்கம், லெ.மு. ரவிச்சந்திரன், தேவகோட்டை நகரச் செயலாளர் பெரி.பாலா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் சுப.துரைராசு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி. செந்தில்குமார், துரை. நாகராஜ், சொ.கண்ணன், சேவியர், சண்முகம், இலக்கிய அணி அழகையா, இளங்கோ அன்பு, பேரூர் கழக செயலாளர்கள் பகுருதீன், பிரம்மையா, அசோக் உட்பட பாகமுகவர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வருகிற 17 ஆம் தேதி ராமநாதபுரத்தில் கழக தலைவரும், முதல்வருமான தளபதி அவர்கள் கலந்து கொள்ளும் தென் மண்டல பாகமுகவர்கள் கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. இந்த பாகமுகவர்கள் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் 2024ல் நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தலில் பாகமுகவர்களின் தேர்தல் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார்கள்.

### ஆகஸ்ட் - 7 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினம்:

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதி ஊர்வலம்!

## மாவட்டச் செயலாளர் திருமதி. பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக. 6-

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்கு பின் இந்த இயக்கத்தை கட்டி காத்து 5 முறை தமிழக முதல்வராக இருந்து தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு சென்றவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.

தன்னுடைய கடைசி காலம் வரை தமிழ், தமிழர் நலன், சமத்துவம், சமூக நீதி என்று பாடுபட்டவர். அவர் நம்மைவிட்டுச் சென்றாலும் அவர் காட்டிய வழியில் கொள்கையில் உறுதியோடு தி.மு.கழக தலைவர் - தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இயக்கத்தை வழி நடத்தி வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 வது நினைவு தினம் நாளை (ஆகஸ்ட் - 7) வருகிறது. காலை 9.00 மணி அளவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அருள்மிகு ஸ்ரீபோத்தி ஸ்ரீபோத்தி விநாயகர் ஆலயம் முன்பிருந்து மாவட்டச் செயலாளராகிய (பி.கீதாஜீவன்) என்னுடைய தலைமையில், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில மீனவரணி துணைச் செயலாளர் சி.புளோரன்ஸ், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் ஏ.சி.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் ஊர்வலமாகச் சென்று மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அரங்கம் முன்பு அமைந்துள்ள முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு



மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட இருக்கிறது.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளைக்கழகங்கள், வார்டுகள் தோறும் அவரது திருவுருவப் படத்தை வைத்து அஞ்சலி செலுத்தவும், கழகத்தின் கொள்கை விளக்கப் பாடல்களை ஒலிப்பரப்பிடவும் கேட்டுக் கேட்டுக் கொள்கிறேன். அந்தந்த பகுதிகளில் நடைபெறும் மலர் அஞ்சலி நிகழ்ச்சியில் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 5ம் ஆண்டு நினைவு நாள்!

# திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், ஆக.6-

தந்தை பெரியாரின் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் லட்சியங்களையும் உயிர் மூச்சாக கொண்டு கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இனம், தமிழ் மொழி காக்கும் பொறுப்பினை தன் தோளிலே சுமந்து தமிழ் மொழி காத்து, வெற்றி நடை போட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். 1969 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்றது முதல் தமிழ்ச் சமுதாய மக்களின் நலன் காக்கும் எண்ணிலடங்கா திட்டங்கள், தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாத்தல், சமூகநீதி, மத நல்லிணக்கம், ஒடுக்கப்பட்டோர் உரிமையினை பாதுகாத்தல் என தொடர்ந்து உழைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்



கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என அனைத்து தரப்பினரின் நல்வாழ்வுக்காக கண்துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர் நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியாருக்கு பிறகு, பேரறிஞர் அண்ணாவிற்கு பிறகு தலைவர் கலைஞர் இல்லாமல் இருந்திருந்தால் இந்த தமிழ்ச் சமுதாயம் நாதியற்று போய் இருக்கும். தலைவர் கலைஞர் அவர்களால் தான் தமிழினம் தலை நிமிர்ந்தது. இன்று நம் உயிர் நிகர் தலைவர் தமிழக முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்கள், தலைவர் கலைஞர் வழியில் உலகம் போற்றும் வகையில் நல்லாட்சியை தந்து கொண்டிருக்கிறார்கள்.

தலைவர் கலைஞரின் நினைவை போற்றும் வகையில் வருகின்ற 07.08.2023 திங்கள்கிழமை அன்று திருப்பூர் வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து வார்டுகளிலும், கிளைக் கழகங்களிலும் காலை 08.00 மணிக்கு கலைஞர் அவர்களின் திருவுறுவப் படம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டுமெனவும், அதனைத் தொடர்ந்து, காலை 09.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் உள்ள அண்ணா பெரியார் சிலை முன்பு அமைக்கப்படவுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாவட்டக் கழக செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உருப்பினறுமான க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில், திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டி.கே. டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அது சமயம் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அணி பொறுப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன் பிறப்புகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு பொது மக்களையும் அதிக அளவில் பங்குகொள்ள செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்!

புதுடெல்லி, ஆக.6-

ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட நில அதிர்வு வட இந்தியாவின் சில பகுதிகளிலும் உணரப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் நாட்டில் சிறிய மற்றும் பெரிய அளவிலான நிலநடுக்கங்கள் அதிகமாக ஏற்படுகின்றன. குறிப்பாக இந்துகுஷ் மலைப்பிரதேசத்தில் அதிக நிலநடுக்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அந்த நிலப்பகுதி யுரேஷிய மற்றும் இந்திய டெக்டானிக் தட்டுகளுக்கு அருகில் அமைந்துள்ளதால், அங்கு அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதாக புவியியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானின் இந்துகுஷ் பகுதியில் இன்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.8 ஆக பதிவு செய்யப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட நில அதிர்வு வட இந்தியாவின் சில பகுதிகளிலும் உணரப்பட்டுள்ளது. குறிப்பாக காஷ்மீர், பஞ்சாப், டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நில அதிர்வால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஏ.ஆர்.ரஹ்மானின் 30 வருட இசைப்பயணம்:

# ஏ.ஆர்.ஆர்.திரைப்பட விழா அறிவிப்பு!

சென்னை, ஆக.6 -

இசை புயல் ஏ.ஆர்.ரஹ்மான் திரையுலகிற்கு வந்து 30 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இதை கொண்டாடும் விதமாக ஏஆர்ஆர் திரைப்பட விழா ஆகஸ்ட் 4 அன்று துவங்கி, ஆக.9 வரை சென்னை மற்றும் கோவையில் நடைபெற்று வருகிறது.

பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் மணிரத்னம் இயக்கிய ‘ரோஜா’ திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி, தன் முதல் படத்திலேயே இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்த அற்புத இசை கலைஞர் ஆவார். கிழக்குச் சீமையிலே, காதலன், பம்பாய் என தொடர்ந்த அவரது இசைப் பயணம் 30 ஆண்டுகளை கடந்து இன்றைய ‘மாமன்னன்’ வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதில் தமிழ் மட்டுமின்றி இந்தி, மலையாளம், தெலுங்கு, ஆங்கிலம் என பல மொழிகளிலும் இசையமைத்துள்ள ஏ.ஆர்.ரஹ்மான், ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ என்ற படத்திற்காக 2 ஆஸ்கர் விருதுகளை வென்று இந்தியாவுக்கு பெருமை தேடி தந்துள்ளார். இது தவிர கோல்டன் குளோப், பாஃப்டா, பல்வேறு படங்களுக்காக தேசிய விருதுகளையும் பெற்றுள்ள இவர் சினிமாவுக்கு வந்து 30 வருடங்கள் ஆகியுள்ள நிலையில், இதைக் கொண்டாடும் விதமாக, ஏ.ஆர்.ரஹ்மான் 5 வருட இடை வெளிக்குப் பிறகு சென்னையில் மெகா நேரடி இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்த உள்ளார். இந்த திருவிழாவின் ஒரு பகுதியாக ஆக. 4 அன்று துவங்கி ஆக, 9 வரை ஏ.ஆர். ஆர். திரைப்பட விழா என்ற நிகழ்ச்சியையும் சென்னை மற்றும் கோவையில் நடத்த உள்ளனர். இதில் ஏ.ஆர். ரஹ்மான் இசையில் வெளியான 20 திரைப்படங்கள் திரையிடப்படுகிறது.

இது குறித்து ஏ.ஆர்.ரஹ்மான் தனது ட்விட்டரில் பகிர்ந்திருந்த பதிவில் “30 ஆண்டுகால அன்பைக் கொண்டாடுகிறேன். உங்கள் அனைவரிடமிருந்தும், அருகிலும் தொலைவிலும் நான் பெற்ற அபாரமான அன்பு மற்றும் ஆதரவிற்கு நன்றி கூறுகிறேன். இந்தப் பயணம் முழுவதும் உங்கள் கருணையும், அரவணைப்பும் என் இதயத்தைத் தொட்டது. இன்னும் பல வருட நேசத்துக்குரிய நினைவுகள் இதோ” என அவர் குறிப்பிட்டிருந்தார்.

### 112வது வட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவு நாள்!

## பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் பங்கேற்பு!

## வட்டச் செயலாளர் வரதை த.பரி வேண்டுகோள்!

சென்னை, ஆக.6-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112வது வட்டக் கழகத்தினருக்கு வட்டச்செயலாளர் வரதை த.பரி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினம் (7.8.2023 - திங்கள்) காலை 1. டிரஸ்ட் புரம் 6வது தெரு , 2 தாஸ்புரம், 3 மைனர் டிரஸ்ட்புரம், 4 புலியூர் 1வது பிரதான சாலை, 5 வரதராஜ பேட்டை, 6 சுபேதார் தோட்டம், 7 ஜக்கரியா காலனி, 8 நேரு தெரு, 9 சூளைமேடு காந்தி சிலை, 10 சௌராஸ்ட்ரா 1வது தெரு ஆகிய மேற்கண்ட இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் துவி ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கிளை நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக செயல் வீரர்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள்.

இவ்வாறு வட்டச் செயலாளர் வரதை த.பரி கேட்டுக் கொண்டுள்ளார்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேற்று (04.08.2023) இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஊராட்சி ஒன்றியம் நவ்லாக் ஊராட்சி சிப்காட், வ.உ.சி நகரில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் மாநில நிதிக்குழு மான்யம் (மாவட்ட ஊராட்சி) திட்டத்தின் கீழ் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வினில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.வளர்மதி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றியக் குழு தலைவர் சே.வெங்கட்ரமணன், துணைத் தலைவர் இராதாகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்சிவராமன், சிவப்பிரகாசம், ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.சரஸ்வதி குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.

# ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!




# இறைவன் எங்கே இருக்கிறான்?

முத்தமிழ் அறிஞர்
கலைஞர் அவர்கள்

ஒவ்வொரு ஆண்டும் தன் பிறந்தநாளில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து நடைமுறைப் படுத்தினார்கள்.

அதன்படி கலைஞர் அவர்களின் 47 ஆவது பிறந்த நாளில், தமிழ்நாட்டில் ஆதரவற்ற குழந்தைகளை வளர்க்க திருக்கோயில்களில் கருணை இல்லங்களை முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

ஆதரவற்ற குழந்தைகளை வளர்க்க திருக்கோயில்களில் “கருணை இல்லங்களை” த் திறந்திட்ட தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டு விழா 1970 ஆம் ஆண்டு சென்னையில் தெய்வீகப் பேரவையின் சார்பில் நடைபெற்றது.

இனமானம் போற்றிய தமிழ்த் துறவி தவத்திரு குன்றக்குடி தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார், ஆதினகர்த்தர்கள் மற்றும் சான்றோர் பெருமக்கள் பங்கேற்றார்கள்.

ஏற்புரை வழங்கிய முதல்வர் கலைஞர் அவர்கள்.....

நான் கடவுளை நம்புகிறேனா,
இல்லையா என்பது முக்கியமல்ல;
கடவுள் நம்பும் அளவிற்கு நாம் நடந்து கொள்கிறோமா என்பதே முக்கியம்.
குருட்டு மனிதன்
இருட்டு அறையில்
கருப்புப் பூனையைத்
தேடுவதுபோல் சிலர்
கடவுளைத் தேடி அலைகிறார்கள்.
இறைவன் எங்கே
இருக்கிறான் தெரியுமா ?
விவேகியின் விழியில்
விஞ்ஞானியின் அறிவில்
பாட்டாளியின் வியர்வையில்
பெண்ணின் கற்பில்
குழந்தையின் மழலையில்
ஏழையின் சிரிப்பில்
இறைவன் இருக்கின்றான்
என்று கலைஞர் உரையாற்றியதை கேட்டு,
உள்ளம் மகிழ்ந்து
கையொலி எழுப்பினர்.

**கே.வி.ஆர்.**